*2017 மார்ச் 21]*

*பரிசீலிக்கப்படும் என்ற நல்ல உறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு முன்னாள் அமைச்சர், திரு. இ. பெரியசாமி அவர்களுடைய கோரிக்கையை, எங்களுடைய கோரிக்கையாக வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் சேர்ந்து அதற்குரிய நடவடிக்கையை சேர்ந்து எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**57—**

## மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1788—திரு. எஸ். ரகுபதி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்டத்திலுள்ள பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, சிறப்பு மருத்துவர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியினை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனை தற்போது வட்டம்சாரா மருத்துவமனையாக* Non taluk *–மருத்துவமனையாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற மருத்துவமனை. இந்த மருத்துவமனையை தற்போது* Taluk *மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே கூடுதலாக 3 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட 11 புதிய பணியிடங்களும், 1 கோடியே 18 இலட்சம் ரூபாய்க்கு புதிய கட்டடங்களும், தேவையான மருத்துவ உபகரணங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்களுடைய அரசின் சார்பிலே வழங்கப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–40*

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தரப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி. ஆனால் பொன்னமராவதியிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தது. அதை தாலுகா மருத்துவமனையாக மாற்றி ஓர் அறிவிப்பு வந்தது. அதற்கு உடனடியாக எல்லோரும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறோம். அங்கே ஆரம்ப சுகாதார நிலையமும் இருந்தாக வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தந்து, அதைப்போல சிறப்பு மருத்துவர்கள்—சொன்னபடி—ஏனென்றால் இப்பொழுது ** சொல்கிறபொழுது மூன்று பேர் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே இருக்கின்றவர்கள் இரண்டு பேர்களாக இருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி நேரத்திலே தேவையில்லாததைப் பேசுகிறார். தேவையில்லாமல் அவர் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ். ரகுபதி:** அந்த மருத்துவமனைக்கு மூன்று மருத்துவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே இரண்டு மருத்துவர்கள்தான் இருக்கின்றார்கள். ஒரு மருத்துவர் அங்கே கிடையாது. அந்த ஒரு மருத்துவரை deputation–ல் புதுக்கோட்டைக்கு அனுப்பிவிட்டார்கள். மகளிர் மருத்துவர் ஒருவர் கந்தவர்வக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டைக்கு 80 கி.மீ. தூரத்திலிருந்து வருகிறார். மற்றொரு மருத்துவர் அறந்தாங்கியிலிருந்து பொன்னமராவதிக்கு 80 கி.மீ. தூரத்திலிருந்து வருகிறார். எனவே deputation–ஐ விட்டுவிட்டு நிரந்தர மருத்துவர்களாக நியமித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2017 மார்ச் 21]*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு சாதகமான பதிலாக, ஒரு நல்ல தகவலாக, உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, உங்களுடைய மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும், ஏற்கெனவே மூன்று மருத்துவர்கள் இருக்கிறார்கள். கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள், ஒரு கோடியே பதினெட்டு இலட்சம் ரூபாய்க்கு கட்டடம் வழங்கப்படும், அதுபோல மருத்துவ உபகரணங்கள் தரப்படும் என்கின்ற நல்ல தகவல்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்னாலே அவர் கேட்ட அந்த* deputation *மருத்துவர்—இப்பொழுது காலையிலே நான் அங்கிருக்கின்ற மருத்துவர்களிடத்திலே பேசினேன். மூன்று மருத்துவர்கள் அங்கே தற்பொழுது பணியிலே இருக்கிறார்கள். நீங்கள் சொல்வதுபோல* deputation *எல்லாம் இல்லாமல் நிரந்தரப் பணியிடங்களாக மாற்றப்படும்.*

*இரண்டாவதாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே, பொதுவாக தாலுகா என்று வருவாய்த் துறையின் சார்பிலே, இந்திய அளவிலே யாரும் செய்யாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 65 புதிய தாலுகாக்களை உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து, 'யானை வரும் முன்னே, மணியோசை வரும் பின்னே' என்பது போல எங்கெல்லாம் தாலுகா வழங்கப்படுகிறதோ அங்கெல்லாம் தாலுகா மருத்துவமனை (குறுக்கீடுகள்) 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே'–*correct *ஆக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். பிறகு ஏன் சத்தம்? அமைதியாக இருங்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *எங்கெல்லாம் தாலுகாவாக வருவாய்த் துறையிலே அறிவிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் அந்த மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். அந்த வகையிலேதான் இன்றைக்கு பொன்னமராவதி ஆரம்ப சுகாதார நிலையம், இட வசதி இல்லாத காரணத்தினால் ஏற்கெனவே அங்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில்—நானும் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன்—ஒரு கிலோ*

[2017 மார்ச் 21

மீட்டர் தூரத்திலே நீங்கள் குறிப்பிடுகின்ற அந்த பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனை நல்ல முறையிலே சிறப்பாக செயல்படுகிறது. 5.5 ஏக்கர் நிலம் அங்கே இருக்கின்றது. பொதுமக்கள் எல்லோருமே அந்த மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்த அடிப்படையிலேதான் ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்ற G.O–விலே amendment கொண்டுவருவதற்கு அரசிற்கு கருத்துரு வரப்பெற்றிருக்கிறது. எந்த பயமும் தேவையில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன அறிவித்தார்களோ அந்த அறிவிப்பினை சிறப்பாக ** நிறைவேற்றக்கூடிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** விரைவில் அந்த திருத்தம் வந்தால் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூரிலே டெங்குக் காய்ச்சல், மர்மக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்ற அபாயங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டியபோது, தமிழக அரசு சார்பாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஆங்காங்கே அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும், அந்த அபாயத்தின் காரணமாக என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் இருப்பவர்கள், குறிப்பாக, கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்டவர்கள் உயர் சிகிச்சைக்காக திருநெல்வேலிக்கோ அல்லது திருவனந்தபுரத்திற்கோ செல்ல வேண்டிய சூழ்நிலைதான் இருக்கின்றது. எனவே, கடையநல்லூர் நகராட்சியிலே இருக்கக்கூடிய அந்த மருத்துவமனையை, மாவட்ட அளவிலான மருத்துவமனையாகத் தரம் உயர்த்த முயற்சிக்க வேண்டும் என்பதையும், அந்த அபாயங்களிலிருந்து பாதுகாப்பைப் பெற மக்கள் வெகுதூரம் சென்று சிகிச்சை பெற வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே, இதிலே தனி கவனம் செலுத்தி, அந்த அபாயங்களிலிருந்து அந்த மக்களை பாதுகாக்கக்கூடிய நடவடிக்கை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2017 மார்ச் 21*]

எடுக்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மேலும், குடிதண்ணீரை மக்கள் ஆங்காங்கே பிடித்து வைக்கின்றார்கள். அதிலே டெங்கு காய்ச்சல் உருவாகிறது என்பதையும் அங்கேயுள்ள அதிகாரிகள் எல்லாம் தெரிவித்திருக்கின்றார்கள்.

*முற்பகல் 10–45*

இப்படிப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளில், சுகாதாரக் கேட்டின் உச்ச நிலைக்கு கடையநல்லூர் பகுதி சென்றுகொண்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். சராசரியாக 100 நபர்கள் வெளியூர்களுக்குச் சென்று மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை உள்ளதால், இதில் தனிக்கவனம் செலுத்தி, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய, குறிப்பாக, கடையநல்லூர் நகராட்சியினுடைய மருத்துவமனையை, உயர்நிலை மருத்துவமனையாக மாற்றுவதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று, அவர் சார்ந்திருக்கக்கூடிய கடையநல்லூர் பகுதியில் டெங்கு காய்ச்சலினுடைய–hotspot என்று சொல்லக்கூடிய அளவிற்கு, தொடர்ந்து தமிழ்நாடு முழுக்க அந்த நோயைக் கட்டுப்படுத்தினாலும்கூட, கடையநல்லூர் பகுதியை hotspot என்றுதான் வைத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அப்போதெல்லாம் என்னைத் தொடர்புகொள்வார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும், பொங்கல் அன்றுகூட, தேவையான அளவில் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட குழுவினை அங்கு அனுப்பி, டெங்கு நோய் சிறப்பாக, கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கடையநல்லூர் மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமித்து, தேவைப்படுகின்ற வசதிகளை ஏற்படுத்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரியில் சிறப்பு மருத்துவர்கள் யார் இருக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியாமல் இருக்கின்றது. தனியார் மருத்துவமனைகளில் எப்படி மருத்துவர்கள் பெயர்களை பெயர் பலகையில் எழுதி, எப்படி முன்னால் வைக்கிறார்களோ, அதுபோன்று எல்லா மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளிலேயும், மருத்துவர்களின் பெயர்களை எழுதி வைத்தால், மக்கள் மருத்துவர்களின் பெயர்களைத் தெரிந்துகொண்டு, அதற்கான சிகிச்சையை பெற முடியும்.

அதேபோல திருவண்ணாமலையில் மருத்துவக் கல்லூரியை துவக்கிய பிறகு, அங்கே 500 படுக்கை வசதிகள் கொண்ட மாவட்ட மருத்துவனை, இன்றைக்கு காலியாக இருக்கிறது. மருத்துவக் கல்லூரியில் இட நெருக்கடி உள்ளது. இந்த 500 படுக்கை வசதிகளை மருத்துவக் கல்லூரி மருத்துவனைக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும், குடிநீர்த் தட்டுப்பாட்டில் அந்த மருத்துவக் கல்லூரி இருக்கின்ற காரணத்தால் அதைச் சரி செய்யவும் அரசு ஆவன செய்யுமா என்பதையும், அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, பொதுவாகவே, அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் எந்தெந்த சிறப்பு மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு digital பலகையில் unique–காக எல்லா இடங்களிலும் சிறப்பாக பெயர் பலகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி எங்கேயாவது பெயர் பலகை இல்லையென்றால், உடனடியாக வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அங்கு பொதுப் பணித் துறையின் மூலமாக தற்காலிகமாகச் சரி செய்யப்பட்டிருக்கின்றது. நிரந்தரத் தீர்விற்காக, அங்கு பொதுப் பணித் துறையினரிடமிருந்து உரிய கருத்துரு மக்கள் நல்வாழ்வுத் துறையில் பெறப்பட்டிருக்கிறது என்பதை

*2017 மார்ச் 21*]

*அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி, ஏற்கெனவே உள்ள பழைய மருத்துவமனையை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**58—**

## வேளாண்மைக் கல்லூரி

***4461—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல், மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள் இங்கே வினா எழுப்பியிருக்கிறார்கள். ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*